முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1032

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.07.2022, புதன்கிழமை

1. தர்ம சக்தியே அரங்கா போற்றி
   தவசித்தியே தேசிகா போற்றி
   பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
   பிரணவ குடில் படைத்த ராஜனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
   புகலுவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 11 நாள், 27.07.2022 புதன்கிழமை)
   ஆற்றல்கூட்டி அரங்கனே உன்னுள் யான்
   அனுதினம் அற்புதத்தை நடத்தி வர
3. வருகின்ற காலங்கள் அரங்கன் தொண்டர்கள் மூலமாக
   வையகமே மாறுமென்பது உறுதியப்பா
   தருகின்ற உன்வழி தீட்சை அத்தனையும்
   தரணியோர்க்கு தவ சித்தியாக ஆற்றல் தரக்கூடும்
4. கூடவே அரங்கன் திருவடி பற்றி
   குவலயத்தில் அனுதினம் ஞானிகள் பூஜை
   நாடெங்கிலும் உலகோர் நித்திய பூஜையாகத் தொடர
   ஞானவான்கள் ஆட்சி சடுதி கண்டு நாட்டிடுவேன் உலகம் ஞான லோகமாகும்
5. ஆகவே அரங்கனால் அற்புதம் நடக்கும்
   ஆக்கம் தந்து ஆறுமுகன் அரங்கனுள்ளே
   மறுப்பின்றி உலகோர் ஏற்று வந்தால் போதும்
   மண்ணுலகம் ஞான ஆட்சிதனை அடையும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–